[Sri C. Subramaniam] [19th August 1960

இருக்கிறது, எவ்வளவு நிதியை இந்த பஸ்களைத் தேசீய மய மாக்குவதில் ஈடுபடுத்தலாம் என்ற முறையில்தான் இன்று காரிய மாற்றி வருகிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை முடிவாக நாம் இந்தச் சட்டசபையில் பரிசீலனை செய்யப் போகிறோம். அப்போது இந்தத் தொழில்களுக்கெல்லாம் முதலிடம் வேண்டாம்; பஸ்களைத் தேசீய மயமாக்குவதற்குத்தான் முதலிடம் கொடுக்கவேண்டுமென்று ஆலோசனை சொன்னால் அப்போது அது பற்றிப் பரிசீலித்துக் கொள்ளலாம். இதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் கருத்து வேற்றுமையின் காரணமாக அதை ஏற்றுக் கொள்ளாமலும் இருக்கலாம். ஆகவே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் போது இவ்வளவு நிதி வசதி இருக்கிறது; இவ்வளவு நிதியை இதற்குப் பயன்படுத்தலாம் என்ற ஆலோசனையைக் கூறலாம். இதை மட்டும் தனியாக எடுத்துக் கொண்டு இங்கே தீர்மானம் கொண்டு வருவது பிரசாரத்திற்காகவோ அல்லது சர்க்கார் பேரில் குற்றம் சாட்ட வேறு ஒன்றும் இல்லாததால் இதை ஒரு குற்றச் சாட்டாக அரசியல் நோக்கத்தோடு கொண்டு வந்த தீர்மான மாகவோதான் இதைக் கருத முடியும் என்பதை இந்தத் தீர் மானத்தை வலியுறுத்தினால் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். ஆகவே, இதை வாபஸ் வாங்கிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு வாபஸ் வாங்கவில்லையென்றால் இது அரசியல் நோக்குடன்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று எடுத்துக் கொள்ளவேண்டியிருக்கும் என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : அமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது "இத்தனை ஆண்டுகளுக்குள்ளாக நாங்கள் பஸ் போக்கு வரத்தைத் தேசீய மயமாக்குகிறோம்" என்ற "அஷ்யூரன்ஸை" க் கூடக் கொடுக்கவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : மூன்றாவது ஐந் தாண்டுத் திட்டத்தைப் பற்றி விவாதிக்கும்போது அந்த யோசனையைச் சொன்னால் கட்டாயம் பரிசீலனை செய்து பார்க்க முடியும்.

SRI S. M. ANNAMALAI : அமைச்சர் அவர்களின் யோசனை காரணமாக நான் இந்தத் தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொள் கிறேன்.

The resolution was by leave, withdrawn.

(2) RENAMING MADRAS STATE AS 'TAMILNAD'.

SRI P. S. CHINNADURAI : என்னது பெயரிலே கொடுக்கப் பட்டிருக்கும் தீர்மானமாகிய "சென்னை ராஜ்யத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்று இந்தச் சட்டசபை அரசாங்கத்தாருக்குச் சிபாரிசு செய்கிறது" என்பதை நான் பிரேரேபிக்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : I second the resolution, Sir

19th August 1960]

MR. SPEAKER : The resolution is before the House for discussion.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை சர்ச்சைக்கு அவசியமில்லாத ஒரு தீர்மானமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று இந்தச் சபையில் நான் வேண்டிக் கொள்கிறேன். ஒரு தீர்மானம் கொண்டு வர முதலிலே அவசியம் என்ன என்பதைக் குறித்து விளக்க வேண்டுமென்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு முன்பு கொண்டு வந்த தீர்மானத்தின் போது கூறினார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் இந்தத் தீர்மானத்திற்கு அவசியம் இருக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரியும். ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தாறும் ஆண்டு இறுதியிலே முதல் முதலாக மொழி வாரி ராஜ்யப் பிரிவினை ஏற்பட்ட காலத்திலேயே நம்முடைய மாநிலத்திற்குத் தமிழ் நாடு என்று பெயரிட்டிருந்திருக்க வேண்டும். ஆனால் யாது காரணத்தினாலோ அன்றைக்கு ராஜ்யத்திற்கு தமிழ் நாடு என்று பெயரிடுவதற்குத் தவறி விட்டார்கள். அதன் பிற்பாடாவது தமிழ் நாடு என்று பெயரிட வேண்டுமென்ற அந்த எண்ணம் ராஜ்ய சர்க்காருக்கே இயல்பாக வந்திருக்க வேண்டும். ஒருகால், தமிழ் நாட்டின் சில பகுதிகள் ஆந்திரத்தோடு அன்று இருந்தன ; அவைகளும் வந்து சேரட்டும் என்று காத்திருந்திருப்பார்களோ என்றுகூட நான் எண்ணினேன். ஆந்திரத்தோடு இருந்த சில பகுதிகள், திருத்தணி போன்ற பகுதிகள் நம்முடைய ராஜ்யத்தோடு சேர்ந்து அதற்காக ஒரு சிறப்பான வெற்றி விழாகூட நாம் கொண்டாடினோம். அந்த வெற்றி விழாக்கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள நம்முடைய நாட்டின் நிதி அமைச்சர்கூடச் சென்றிருந்தார்கள். அதை ஒரு சுப வேளையாக எடுத்துக்கொண்டு ஒருகால் அன்றைக்கே "தமிழ் நாடு" என்று பெயர் பிரகடனம் செய்யப்படும் என்று நான் இயல்பாகவே எதிர் பார்த்தேன். ஆனால் அன்றைக்கும் அவர்கள் அந்தப் பெயரை இட முன் வரவில்லை. ராஜ்ய சர்க்காருக்கு நிறைய வேலை இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஒருக்கால் மறதி காரணமாக அப்படிப் பெயரிடத் தவறி இருப்பார்களேயானால் உண்மையில் இந்தத் தீர்மானம் ராஜ்ய சர்க்காருக்குத் துணை புரியும் என்பது தான் என்னுடைய நம்பிக்கை. இதற்கு அரசியல் நோக்கம் உண்மையிலேயே கனம் நிதி அமைச்சர் அவர்கள் கற்பிக்கமாட்டார் என்று நான் நம்புகிறேன். என் பெயரால் தீர்மானம் வந்து விட்டதே தவிர உண்மையிலே ராஜ்ய சர்க்காருடைய உள்ளக் கிடக்கையும் இதுவாகத்தான் இருக்கவேண்டும் என்பதிலே எனக்கு நம்பிக்கை உண்டு. இந்த மாநிலத்தில் ஆட்சி மொழி தமிழ்தான் இருக்கவேண்டும் என்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் மிகவும் வேகமாக முழங்கி வருகிறார்கள். இந்த சட்டசபைக்கு உள்ளே மட்டுமல்ல, வெளியிலேயும். தமிழ் மொழிக்கு அந்த உயரிய ஸ்தானத்தைக் கொடுக்க வேண்டும் என்பதிலே இந்த ராஜ்ய சர்க்காருக்கும் சரி, ராஜ்யத்தின் நிதி அமைச்சருக்கும் சரி, இருக்கும் ஆர்வம் உண்மையிலேயே பாராட்டத்தக்கது. அதனைப் பெரிதும் தமிழ் மக்கள் போற்றுகிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

அப்படித் தமிழ் மொழிக்கு உயரிய, சிறப்பான ஸ்தானம் கொடுக்கவேண்டுமென்று இருக்கும் ராஜ்ய அரசாங்கத்தின் உள்ளக் கிடக்கை, தமிழ் மொழி பேசும் மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டுமென்ற எண்ணமாகத்தான் இருக்கும் என்று நான் உறுதியாக எடுத்துக்கொள்கிறேன். அப்படியானால், ஏன் இதுகாறும் நிறைவேற்றப்படவில்லை என்ற விஷயத்தைச் சிந்திக்கும்போது, ஒன்று—அதிகமான வேலையிலே இதனை நிறை வேற்றத் தவறியிருப்பார்கள்; அல்லது யாரோ மற்றவர்கள் முதலிலே இதைச் சொல்லத் துவங்கிவிட்டார்கள் என்ற காரணத் தினாலே அவர்கள் பேசாமல் இருக்கும் நாள் வரட்டும், அவர்கள் ஓய்ந்துபோகட்டும், நாமே தமிழ்நாடு என்ற பெயரிடலாம் என்ற எண்ணம் இருக்கவேண்டும். எப்படியிருந்தபோதிலும், நான் நினைக்கிறேன், அரசியல் நோக்கம் கற்பிக்கவேண்டியதில்லை இந்த விஷயத்திலே என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து.

"சென்னை ராஜ்யம்" என்ற பெயர் இருந்தால்நான், 'மெட்ராஸ் ஸ்டேட்' என்ற பெயர் இருந்தால்தான் வெளிநாடுகளில் எல்லாம் நம்மைப்பற்றித் தெரிந்துகொள்ள முடியும் என்ற ஒரு கருத்தும் சில காலத்திற்கு முன்பாக வெளியிடப்பட்டது. அந்தக் கருத்தை யெல்லாம் மாற்றிக்கொண்டிருப்பார்கள் அந்தக் கருத்தை வெளி யிட்டவர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். சென்னை ராஜ்யம், அல்லது மெட்ராஸ் ஸ்டேட் என்று சொல்வதற்குப் பதிலாக 'தமிழ்நாடு' என்று சொன்னால்தான் வெளியில் இருக்கிறவர்கள் அதைச் சிறப்பாக வரவேற்பார்கள் என்ற ஒரு நிலையை இப்போதா வது புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். பம்பாய் ராஜ்யம், என்ற பெயர் சிறப்பாக பல காலம் இருந்தது. இன்றைக்கு பம்பாய் ராஜ்யம் என்ற நிலைமாறி, அதற்குப் பதிலாக 'மகாராஷ்டிரம்' என்றும் 'குஜராத்' என்றும் பெயரிடப் பட்டிருக்கிறது. புதிதாக உருவாக்கப்பட்ட மாநிலங்கள் அவை. இதேபோல், நம்முடைய நாட்டிலே அந்த அந்த மொழி பேசுகின்ற பகுதிகளைச் சேர்ந்த மாநிலங்களுக்கு அந்த அந்த மொழியை அடிப்படையாகக் கொண்ட பெயர்களே இடப்பட்டிருக்கின்றன.

THE HON. SRI C. SUBRAMANIAM : தென்னிந்தியாவில் இல்லை.

SRI P. S. CHINNADURAI : தென்னிந்தியாவில் எடுத்துக் கொண்டாலும், தெலுங்கு பேசுகிற பகுதிக்கு ஆந்திரம் என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தெலுங்கு நாடு என்று பெயர் வைக்கவில்லை.

SRI P. S. CHINNADURAI : மலையாள மொழி பேசும் பகுதிக்கு கேரளம் என்று வைத்திருக்கிறார்கள். கன்னடம் மொழி பேசும் பகுதிக்கு மைசூர் என்று இன்னும் பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் விரைவில் தங்களுடைய மாநிலத்தின் பெயரை மாற்றிக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஒருக்கால் தமிழ்நாடு என்ற பெயர் இங்கு வைக்கப்படுவதற்காகக்

19th August 1960] [Sri P. S. Chinnadurai]

காத்திருக்கிறார்களோ என்னவோ. எப்படியும் நம்முடைய ராஜ்யத்திற்கு தமிழ்நாடு என்று பெயரிடுவது மிகவும் பொருத்தம் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். தமிழ் பேசுகின்ற மக்கள் நிறைந்த இந்த மாநிலத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடுவதுதான் மிகவும் சிறந்தது என்று நான் இந்த நேரத்தில் ராஜ்ய சர்க்காருக்கு மிகத் தெளிவுற எடுத்துக்கூற விரும்புகிறேன்.

சென்ற 1956-வது ஆண்டில் ஒரு முக்கியமான சம்பவம் நிகழ்ந்தது. இதற்கு முந்திய சட்டசபையின் கடைசி ஆண்டில் தான் தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டுவரக்கூடிய தீர்மானத்தை இந்தச் சபையிலே கனம் நிதி அமைச்சர் அவர்கள் பிரஸ்தாபித்தார்கள் என்று பத்திரிகை மூலமாக அன்று அறிந்தேன். அதுபோல், ஒரு சமயம் இந்தச் சட்டசபையினுடைய கடைசி ஆண்டாகிய அடுத்த ஆண்டிலேதான் பெயர் வைத்துக் கொள்ளலாம் என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறாரோ என்னவோ தெரியாது. ஒருக்கால் இடையிலே குறுக்கிட்டுச் சொன்னாலுங்கூட இந்தத் தீர்மானத்தை விட்டு விடத் தயாராக இருக்கிறேன். 'தமிழ்நாடு' என்று இந்த மாநிலத்திற்குப் பெயர் வைக்கவேண்டுமென்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது ; மனதிற்குள்ளே இந்த எண்ணம் தான் எல்லோருக்கும் இருக்கிறது. எதிர்த்தரப்பிலே உள்ளவர்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால், ஒரு சின்னச் சந்தேகம் இருந்தது. அதாவது, சுதந்திரா கட்சி இதை ஒப்புக்கொள்ளாமல் இருக்கக்கூடுமோ என்ற ஐயப்பாடு இருந்தது. ஆனால், சுதந்திராக் கட்சியைச் சார்ந்தவர்கள் கூட தங்கள் மாநில மாநாட்டில் சமீபத்தில் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்கள் இங்கு இல்லை.

SRI P. S. CHINNADURAI : வெளியிலே கூறி இருப்பதை நான் கூறுகிறேன். அந்தச் சந்தேகத்திற்கும் இப்பொழுது இடமில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ராஜ்யத்திலிருக்கும் எல்லா அரசியல் கருத்துக் கொண்டவர்களும் சரி, அரசியல் கருத்துக்கள் கொள்ளாத நடு நிலைமையாளர்களும் சரி, 'தமிழ்நாடு' என்று அழைப்பதைப் பெருவாரியாக ஏற்றுக் கொள்ளுகிறார்கள் என்பதை நாம் வெளிப்படையாகக் காண்கிறோம். ஆகையால், 'தமிழ்நாடு' என்று பெயரிடுவதற்கு இந்த ராஜ்ய சர்க்கார் இணங்கவேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன். இதுகாறும் ராஜ்ய சர்க்கார் இணக்கத்தைப் பகிரங்கமாகத் தெரிவிக்காத ஒரே ஒரு காரணத்திற்காகத்தான் இந்தச் சபை முன்பாக இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபிக்க முன்வந்தேனே தவிர, ராஜ்ய சர்க்காருக்குத் தெரியாத ஒன்றை நான் எடுத்துக்கூறவேண்டுமென்றோ வேறு வகையில் அரசியல் ரீதியாக ஒரு தனிச் செல்வாக்கைப் பெறவேண்டுமென்ற அந்த எண்ணத்திலோ நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரவில்லை. இன்றைக்குங்கூட மறுபடியும் வலியுறுத்திக் கூறுவது என்னவென்றால் இதனால் அரசியல் ரீதியான செல்வாக்கு ஒரு தரப்பினருக்கு ஏற்பட இடம் ஏற்பட்டு விடும்

[Sri P. S. Chinnadurai] [19th August 1960

என்று ராஜ்ய சர்க்கார் தரப்பிலே கருதப்படுவதாக ஒரு வார்த்தை சொன்னால்கூட இந்தத் தீர்மானத்தை நான் வாபஸ் பெற்றுக்கொள்வதற்கும் தயாராயிருக்கிறேன். ஆனால், காரணமே இல்லாமல், ஒரு வகையான பிடிவாத உணர்ச்சியை ராஜ்ய சர்க்கார் காட்டினால் அப்பொழுதுதான் இந்தச் சபை இந்தத் தீர்மானத்தின் அவசியத்தை உணரவேண்டிய அவசியம் இருக்கிறது என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்தநேரத்தில் இம்மாதிரி பிரச்னை வந்தபோதிலுங்கூட, ராஜ்ய சர்க்கார் தரப்பிலேயிருந்து சரியான முகாந்திரம் காட்டப்படவில்லை. தமிழ்நாடு என்று பெயர் வைக்க எந்த அளவிலே அவர்கள் விரும்பவில்லை, ஏன் விரும்பவில்லை என்று சரியான காரணங்களை இதுகாறும் காட்டவில்லை. நிதி அமைச்சர் அவர்கள் வழக்கறிஞர் என்ற முறையில் மிகத் திறமையாக வாதாடக் கூடியவர் என்றாலும், தகுந்த காரணங்களை இதற்கு எதிராகக் காண்பிக்க முடியாது என்றுதான் நான் நினைக்கிறேன். ஏனென்றால் அவருடைய மனச்சாட்சி ஒருபொழுதும் இதற்கு எதிராகப் பேச இடம் அளிக்கவே முடியாது என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கை உண்டு. ஏனென்றால், இருவரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையிலே அவருடைய மனச்சாட்சியை என்னால் அறியக்கூடும், என்னுடைய மனச் சாட்சியையும் அவரால் அறிய முடியும், என்று எடுத்துக்கொண்டு தான் அவ்வளவு உரிமையோடு பேசுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒரே மாவட்டமாக இல்லாவிட்டாலும் அறிய முடியும்.

SRI P. S. CHINNADURAI : அது தவிர, வேறு நோக்கம் ஒன்றுமில்லை. எப்படியும் ராஜ்ய சர்க்கார் இந்தத் தீர்மானத்திற்குத் தங்கள் முழு மனதோடு கூடிய ஆதரவை நல்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member may continue his speech on the next non-official day.

1-28 p.m. The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

A. STATUTORY RULES AND ORDERS.

112. Notification issued with G.O. Ms. No. 1080, Local Administration, dated 25th June 1960, extending the term of office of the members of the Othakadai Panchayat (Madurai district) under section 10 (1) of the Madras Village Panchayats Act, 1950. [*Laid on the table of the House under section* 113 (4) *of the Madras Village Panchayat's Act,* 1950. (*Madras Act X of* 1950).]

B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

51. Assurance No. 928—Answer to Legislative Assembly starred Question No. 724, asked by Sri A. A. Rasheed and three others.